# பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி

[கட்டுரைத் தொகுப்பு]

பதிப்பாசிரியர்

முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்

முனைவர் ஏ. கோதண்டராமன்

அகல் பதிப்பகம்

பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி [கட்டுரைத் தொகுப்பு]

அகல் பதிப்பகம்

விலை : ரூ.

அகல் பதிப்பகம்

ISBN 9 788198 977472

ஆன்றோன் அவ்வழித் தோன்றினன் ஆதலின்
ஈன்றோன் ஏழ்நாள் இன்னுயிர் வைத்தாள்.'

**தொகுப்புரை**

பௌத்தம் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அருந்தொண்டு செய்துள்ளது. இவ்வாறு பல மாற்றங்களை உருவாக்கிய பௌத்தம் தமிழர்கள் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. மேற்காட்டிய பௌத்த அறிஞர்களும் அவர்கள் இயற்றிய நூல்களும் புத்தர் கொள்கைகளை தமிழ்மொழி வாயிலாகப் பரவச் செய்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.



# தமிழ் வளர்ச்சியில் தேவாரத்தின் பங்கு

**முனைவர் ஆ.சிவனருட்செல்வி,**
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

**முன்னுரை**

அன்றைய காலகட்டத்தில் பக்தி இலக்கியங்களைத் தவிர்த்து தமிழை வளர்ப்பது என்பது இயலாது தமிழ்வளர்ந்ததே பக்தி இலக்கியங்களில் தான் என்று கூறலாம். தமிழ்சமூகத்தில் பக்தி இயக்கம் ஒரு மாபெரும் இலக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறலாம். தமிழர்களின் வாழ்வில் பண்பாடு கலாச்சாரம் பழக்கவழக்கம் நம்பிக்கைகள் அகவாழ்வு புறவாழ்வு போன்ற அனைத்து இடங்களிலும் பக்தி இலக்கியங்களின் தாக்கத்தை காணமுடிகிறது. பக்தி இலக்கியங்கள் 6ஆம் நூற்றாண்டில் இருந்து 12 ஆம்நூற்றாண்டு வரை சிறப்பாக வளர்ச்சி அடைந்தது. நாயன்மார்களும், ஆழ்வார்களும், பௌத்தர்களும், சமணர்களும் மக்களுக்கு வழிகாட்டியாக இருந்தனர். இவர்களின் பாடல்கள் தமிழ் வளர்ச்சிக்கு முக்கிய பங்குவகித்தன. பக்தி மார்க்கத்தில் முதன்மையானவர்கள் நாயன்மார்கள் அதில் பக்தியை நடைமுறை வாழ்க்கையில் காண்பித்தவர்கள். தேவாரம் தமிழ் பக்தி இலக்கியங்களில் முதன்மையானது. இதுமூவர் தேவாரம் என அழைக்கப்படும் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் ஆகியோரின் தொகுப்பாகும் ஏழாம் நூற்றாண்டில் தோன்றியது. தமிழில் தோன்றிய மிகப் பெரிய பக்தி நூல் இது. தமிழ் மொழியில் பரிணாமத்தை ஏற்படுத்தியது.தேவாரப் பாடல்கள் தமிழ் மொழியில் இலக்கிய வளர்ச்சியிலும் பன்முகப்படுத்தலிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. தேவாரம் மொழியை இசை,பாவனை, ஆன்மீகம், உவமை, வாழ்வியல் முதலிய அம்சங்களுடன் இணைத்து தமிழுக்கு ஒரு புது விழிப்பும் இலக்கியச் செழிப்பும் தந்தது என்று கூறலாம்.

**தெளிவும் இசையும்**

தேவாரப் பாடல்கள் இசை மிகுந்த பண்ணிசை அமைப்புகளுடன் எழுதப்பட்டவை இது தமிழ் மொழிக்கு இசை மற்றும் இலக்கியம் கலந்த ஒரு புதிய இலக்கிய வடிவத்தை உருவாக்கியுள்ளது என்று கூறலாம். திருஞானசம்பந்தரின்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுட லைப்பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனை நாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிர மாபுரம் மேவிய பெம்மானிவ னன்றே.(1-1-1-)

என்ற பாடல் வரி சங்கீதத் தமிழுக்கு சிறந்த எடுத்துக்காட்டு இசைத்தமிழ் வளர்ச்சி அடைந்ததால் பக்தி பாடல்கள் கோவில்களிலும் திருவிழாக்களிலும் பெருமளவில் பாவனையாகி தமிழின் வழியாக ஆன்மீக மக்களுக்கு எடுத்துபாடப்பட்டது.

**அழகிய தமிழ் சொல்லாட்சி**

தேவாரப் பாடல்கள் மிகுந்த சொல்லழகுடனும் சொல்அடுக்குகளுடனும் எழுதப்பட்டுள்ளன. அப்பாடல்களில் உவமைகள், நயம், இரட்டைச் சொல், முன்னிலை, பின்னிலை ,இலக்கிய நயங்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

குண்டு முற்றிக் கூறை யின்றியே
பிண்ட முண்ணும் பிராந்தர் சொற்கொளேல் என்ற (1-292)

பாடலில் குண்டு என்ற சொல் உடலையும், முற்றி என்பது முழுமையையும் குறிக்கிறது.

மயங்கியோர் பேய்த்தேர்ப்பின்- (1-10)

பேய்த்தேர் என்பது கானல் நீர் இவ்வாறு பல சொல்லாட்சிகள் தேவாரப் பாடல்களில் பயன்படுத்தப்படுகிறது

**பண்பாட்டுத் தமிழ் வளர்ச்சி**

தேவாரப் பாடல்களில் தமிழரின் நெறி, நாகரிகம், பண்பாடு,உணர்வு ஆகிய அனைத்தும் வெளிப்படுத்தப்படுகிறது. எளியநடையில் எழுதப்பட்டுள்ளதால் மக்களுக்கு புரியக்கூடிய தமிழ் உருவானது இதனால் வளமான இலக்கிய தமிழ் உருவாகி மக்களின் மத்தியில் சிறப்புப் பெற்று பண்பாட்டு அம்சமான மொழி



மரபுகள், பத்தி, சமுதாயம், இசை இவைகள் தேவாரப்பாடல்களில் புதைந்து கிடப்பதை காணலாம். நம்பிக்கைகள் சமூக வாழ்க்கை கலை மற்றும் இலக்கியங்கள் சூழலில் அக்கறை போன்ற தமிழர்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறைகளை புரிந்து கொள்ள ஒரு முக்கியப் பகுதியாக உள்ளது என்று கூறலாம்

**ஆன்மீகம் மற்றும் தத்துவம்**

தேவாரப் பாடல்கள் தமிழில் ஆன்மீக கருத்துக்களை எளிமையாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்தியுள்ளது வேதம் ஆகமம் சார்ந்த கருத்துக்கள் கூட தமிழில் பக்தி உணர்வோடு பாடப்பட்டுள்ளன .

“தராவணம் ஆவது நீறு
தத்துவமாவது நீறு
அராஅவணங்கும்
திருமேனி
ஆலவாயன்
திருநீறே”. ( பா-08)

வாழ்க்கை நிலையில்லாதது உலகப் பொருள்கள் அனைத்தும் அழியக்கூடியவை அழியாத நிலைத்து நிற்பது பரம்பொருள் ஒன்று மட்டுமே என்பதை

நல் வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில்
சொல்வாய் கழிகின் றதறிந்தடியேன்
தொடர்ந்தேன் உய்யப்போ வதோர் சூழல் சொல்லே.(7-3-1)

என்ற பாடலில் வெண்மையான நிலவினைச் சூடியமாசற்றவனே உலகில் தோன்றிய அனைவரும் நல்லதுணையாகிய மனைவியைப் பெற்றார் இல்லற வாழ்வில் வாழ்ந்தார்கள் உண்டார்கள் கொடுத்தார்கள் முப்படைந்தார்கள். உலகில் சொல்லப்படும் நடைமுறையை அறிந்து அதை வெறுத்து அடியேன் உன்னை அடைந்தேன் இதிலிருந்து என்னை காப்பாற்றி அருள்வாயாக என்று இறைவனை வேண்டுகிறார்.மனிதனாக மட்டுமல்ல இவ்வுலகில் ஒருஉயிராக தோன்றிவிட்டாலே மரணம் என்பது நிச்சயம் என்ற சிந்தனையை

தோற்றம் உண்டு மரணம் உண்டு (7-7-2)

இன்பம் உண்டேன் துன்பம் உண்டு (7-7-8)

செற்று ஒருவரைச் செய்த தீமைகள்
இம்மையே வரும் திண்ணமே (7-35-4)

ஒருவரை பகைத்து அவருக்கு தீங்கிழைத்த பாவங்கள் மறுமை வரை காத்திராமல் இம்மையிலே வந்து வருத்தும் என்கிறார்.

**பாடல் வடிவ இலக்கிய வளர்ச்சி**

தேவாரத்தின் மூலம் பாடல் இலக்கியம் வளர்ந்தது தேவாரபாடல்கள் திருவிழாக்களிலும் கோவில் வழிபாடுகளிலும் நாடகம் நடனம் போன்ற துறைகளிலும் பயன்பட்டதால் தமிழில் சமூக நிகழ்வுகளோடு பக்தி இலக்கியமும் இணைந்தது. என்று கூறலாம். இது நாடகத் தமிழ் இசைத் தமிழ் நாட்டுப்புறப்பாடல் போன்ற வடிவங்களை வளர்க்கும் தளமாகவும் அமைந்தது. மேலும் தேவாரத்தில் தமிழ் பொன்மொழிகள் , இலக்கணங்கள், உவமைகள் போன்றவை அதிகமாக கையாளப்பட்டுள்ளன.

"மத்துறு தயிரே போல மறுகும் என் உள்ளம்"
- (4-52-9)

போன்ற உவமைகளைக் காணலாம்.

தேவாரத்தில் பழமொழிகள் காணப்படுகின்றன பழமொழிகள் தமிழர்களின் வாழ்க்கை முறையையும் நம்பிக்கைகளையும் சமய கருத்துக்களையும் பிரதிபலிக்கின்றன. அகத்தில் உள்ளது முகத்தில் அச்சமில்லாதவன் அம்பலம் ஏறு வான்

"அச்சாணி இல்லாத தேர் முச்சானும் ஓடாது"

"தெய்வப்புல அவனுக்கு நாவுணரும்"

ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடுதல்போல
இருதலைக் கொள்ளியின் இடையகப்பட்டஎறும்புபோல
உலை நீரில் திளைத்து விளையாடிய ஆமை போலத்

"சத்திர ஓடாவிக்குக் கை உணரும்"



"பங்காளி வீடு வேகிறது சுக்கான்
கொண்டு தண்ணீர் விட்டுப் பிரிந்து செல்லும்"

''பாம்பின் வாய்தேரை போல'' - இது போன்ற பழமொழிகளை தேவாரத்தில் பல இடங்களில் காணலாம். மேலும் விருத்தம், வஞ்சிப்பா, வஞ்சிப்பா விருத்தம் போன்ற இலக்கிய இலக்கண முறைகள் தேவாரத்தில் கையாளப்பட்டுள்ளன.

**முடிவுரை**

தேவாரப் பாடல்கள் தமிழில் வளர்ச்சிக்கும் மொழிபெருக்கத்துக்கும் இசைக்கும் ஆன்மீகத்திற்கும் பெறும் பங்காற்றியது மேலும் உவமைகள், புதுப்பதங்கள், பாமரமக்களும் பாடும் முறை, கவிதை வடிவம் போன்றவற்றையும்தமிழுக்கு கொடுத்துள்ளனர். தமிழின் செழுமைக்கும் மக்கள்வாழ்க்கைக்கும் இடையே ஒரு பாலமாக அமைந்துள்ளது என்று கூறலாம் தமிழ் மொழியை ஒரு பத்தி மொழியாகமட்டுமல்லாமல் கவிதை மற்றும் இசைமொழியாகவும் மேம்படுத்தியது. தேவாரம் தமிழ் வளர்ச்சியின் முக்காலத்தில் ஒரு முக்கிய கல்லாக விளங்குகிறது.

**துணைநூற்பட்டியல்**


பன்னிருதிருமுறைகள் மணிவாசகர் பதிப்பகம்

1. பக்தி இலக்கியம் - ப.அருணாசலம் தமிழ்ப்புத்தகாலயம்
2. சைவ சமயம் - ப.அருணாசலம் தமிழ்ப்புத்தகாலயம்
3. தமிழ் பக்தி இலக்கியம் அ.மணவாளன் சாகித்தி அகாதமி